
தில்லைவாழ் அந்தணர்கள்
"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"
எனச் சுந்தர மூர்த்தி நாயனாரால்
அடியார் பெருமக்களில்
முதலாவதாக வைத்துப் போற்றப்படுபவர்கள்.
தில்லைவாழ் அந்தணர்களாகிய நாங்கள் கூத்தப் பெருமானையே வழிபட்டு நிற்பவர்கள்.
சோழ மன்னன் ஒருவன் தில்லைக் கோயிலுக்கு வரும்பொழுது தில்லைவாழ் அந்தணர்களை கண்டு வணங்குகிறான்.


சைவநெறியில் திளைத்து நிற்கும் சோழ மன்னா! நாங்கள் 2999 பேர்தான். தில்லையில் ஆடும் ஈசன் நடராச மூர்த்தியும் எங்களில் ஒருவராவார். எனவே நாங்கள் மூவாயிரம் பேர் ஆனோம்
உலகம் அருள்பெற்று வாழும் பொருட்டு முறைப்படி ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினியம், என்ற மூன்று வேள்விகளைச் செய்து வருகிறோம்.
நாங்கள் நாள்தோறும் தில்லை நடராசப்பெருமானின் திருநடனத்தைப் போற்றி வாழ்பவர்கள்.


நாங்கள் வேதம் ஓதி முறைப்படி நடராசப் பெருமானுக்கு வழிபாடு,
விழாக்கள் முதலியவற்றை செய்து வருகிறோம்.


சிவன் திருவடியில் பதிந்த
அன்பு ஒன்றே போதும்
என்று எண்ணும் பெருவாழ்வு
உடையவர்கள் நாங்கள்.
தில்லைவாழ் அந்தணர் புராணம்
நிறைவு